செ.வெ.எண்: 11 நாள்: 05.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

## ஆழ்கடல் மீன்பிடி படகு அமைக்க மானிய உதவி

தமிழகத்தில் அண்மைக்கடல் பகுதியில் அதிகரித்து வரும் மீன்பிடி அழுத்தத்தை குறைத்திடவும், ஆழ்கடல் பகுதியில் செறிந்துள்ள மீன்வள ஆதாரங்களை முறையாக பயன்படுத்திடவும், தமிழக மீனவர்கள் தங்களின் பாரம்பரிய மிக்க கடற்பகுதியில் மீன்பிடிக்கும் போது எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு மீனவர்களின் படகுகளும் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமை ஆக்கப்படுகிறது. எனவே, தமிழக மீனவர்கள் எல்லைத்தாண்டி மீன்பிடிப்பதை தவிர்த்திடவும் மற்றும் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிடும் வகையில் மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் கூடிய பாக் நீரிணைப்பு பகுதிகளில் இழுவலை படகுகளுக்கு மாற்றாக ஆழ்கடல் மீன்பிடிப்பு படகு கட்டும் திட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் அறிவித்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

பாக் நீரிணைப்பு பகுதியில் இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றிடும் திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள ஆழ்கடல் மீன்பிடி படகு ஒன்றின் விலை ரூ.80.00 இலட்சம் ஆகும். இத்தொகையில் 50 சதவீதம் (அதாவது ரூ.40.00 இலட்சம்) மத்திய அரசு மானியம், 20 சதவீதம் (அதாவது ரூ.16.00 இலட்சம்) மாநில அரசின் மானியம், 10 சதவீதம் (அதாவது ரூ.8.00 இலட்சம்) பயனாளிகளின் பங்களிப்பு மற்றும் 20 சதவீதம் (அதாவது ரூ.16.00 இலட்சம்) வங்கி கடனாகவும் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும் இத்திட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பு மற்றும் சுகாதாரமான முறையில் மீன்களை கையாளும் தொழில் நுட்பம் தொடர்பான பயிற்சியை சென்னை மற்றும் கொச்சியிலுள்ள "மத்திய மீன்வள கடல் சார் பொறியியல் பயிற்சி நிலையம் (CIFNET) மூலமாக திறன் மேம்பாட்டு பயிற்சி மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் மீனவர்கள் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகத்தில் உள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், நாகப்பட்டினம் (தெற்கு) அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்ட இழுவலை மீன்பிடி படகுகள் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டு / மீட்கப்படாத படகுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விண்ணபங்கள் பெறப்படுகிறது என மாவட்ட ஆட்சத் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**